**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.497/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : PW-1/LW-1 <br> Name : கவிதா <br> Father's/Husband's Name : அறிவழகன் <br> Nationality : Indian | Village : திருப்பனந்தாள் <br> Age : <br> Taluk : திருவிடைமருதூர் <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.03.2026**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜர்.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக திருப்பனந்தாள் அரசு மருத்துமனையில் வைத்து விசாரித்தார்கள். தேதி நினைவில்லை. பகல் 4.30 மணியளவில் அரசு மருத்துமனையில் வைத்து விசாரித்தார்கள். இந்த வழக்கின் புகார்தாரர் எனது தம்பி என்றால் சரிதான். எனது தம்பி வீட்டிற்கு பின்புறம்தான் எதிரியின் வீடு என்றால் சரிதான். நான், எதிரி, எனது தம்பி ஆகியோர் குடியிருக்கும் வீடுகள் திருப்பனந்தாள் ஆதினத்திற்கு சொந்தமானது என்றால் சரிதான். எனது குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் இடப் பிரச்சனை சம்மந்தமாக கோவில் நிர்வாகத்தார் அளந்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எதிரி குடித்துவிட்டு பிரச்சனை செய்தார். இடப்பிரச்சனை இல்லை. எனது தம்பியை

மருத்துமனைக்கு தெருக்காரர்கள் அழைத்து சென்றார்கள். யார் என்று குறிப்பிட்டு தெரியுமா என்றால் தெருவில் உள்ள அனைவரும் அழைத்து சென்றார்கள். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எந்தவிதமான சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அசா1 க்கு ஏற்பட்ட காயம் எதிரியால் ஏற்படவில்லை என்றாலும் நான் சொன்ன சம்பவ இடத்தில் சம்பவ நேரத்தில் நான் இல்லை என்றாலும் நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் மருத்துமனைக்கு அழைத்து சென்றிருப்பேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கு 3 பெண் குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். எதிரி கடந்த 10 ஆண்டுகளாக சென்னை கொட்டி வாக்கத்தில் வேலை நிமிர்த்தமாக குடும்பத்துடன் தங்கியிருந்தார்கள் என்றால் சரிதான். நான் காயம்பட்டவரின் தம்பி என்பதால் முதல் விசாரணையில் மிகை படுத்தி சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் மருத்துவர் அறிக்கையில் எனது தம்பி மீது மிளகாய் பொடி இருந்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பில்லை என்றாலும் நடக்காத சம்பவத்தை மிகை படுத்தி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவத்திற்கு எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அசா3 பிரபு தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான்.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**